Vijey விஜய்

# விஜய்

11.04.2018 - மலர் 15, இதழ் 07




மனதை மயக்கும் பருவ காலங்கள்



969 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்




கட்டாக்காலி நாய்கள் பாதுகாப்பு சேவையில்...



மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

ISSN 1391-9504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை வந்துவிட்டால் சுற்றாடலும் அழகுபெறும்...





சித்திரை மாதம் நெருங்கிவிட்டாலே இயற்கை சுற்றாடலும் அழகுபெறத் தொடங்கி விடும். சித்திரை அண்மித்து விட்டது என்பதை முதலில் அறிவிப்பது கூவும் குயில்கள்தான். இது தவிர, இக்காலப்பகுதியில் இயற்கையுடன் சேர்ந்த பல்வேறு சுற்றாடல் மாறுதல்களையும் நாம் காணலாம். மனம் கவரும் இந்த அழகிய மாற்றங்கள், வயது வித்தியாசமின்றி அனைவர் மனதிலும் புத்துணர்ச்சியையும் மன மகிழ்ச்சியையும் ஏற்படுத்து கின்றன. ஆக, சித்திரை மாதத்தில் சுற்றாடலில் காணக்கூடிய அழகிய மாற்றங்கள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

## இயற்கை மாற்றங்கள்

மனிதனுடன் இயற்கை நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருக்கின்றது. அந்தவகையில், சித்திரை மாதம் பிறக்கப் போகின்றது என்பதை முதன்முதலில் மனிதர்களுக்கு அறிவிப்பது இயற்கை ஆகும். சுற்றாடலில் ஏற்படும் இயற்கை மாற்றங்கள் இதற்கு சிறந்த சான்றாகும். இலங்கையை பொறுத்தவரையில், சித்திரை மாதப் பிறப்புடன் வசந்த காலம் ஆரம்பமாகின்றது என்பதனால், இக்காலத்தில் சுற்றாடலில் காணப்படும் மரங்கள் பூத்துக் குலுங்கும்.

## பிரகாசிக்கும் முள்முருங்கை

முள்முருங்கை மரங்கள் மார்ச் மாத இறுதியில் பூக்கத் தொடங்கும். இந்தப் பூக்கள் பிரகாசமான சிவப்பு நிறத்தில் காணப்படும். ஆனால், இக்காலப் பகுதியில் ஏனைய தாவரங்களில் பூக்கும் சிவப்பு நிறப் பூக்களில் முள்முருங்கைப் பூவிலுள்ள பிரகாசமான சிவப்பினை காணமுடியாது.

## கூவும் குயில்கள்

சித்திரை மாதம் நெருங்கும்போது, குயில்கள் கூவத் தொடங்கும். ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் குயில்களின் இனப்பெருக்க காலமாகும். ஆக, தமது துணையை அழைக்கவே ஆண் குயில்கள் இவ்வாறு கூவுகின்றன. பெண் குயில்களும் அதற்கேற்றவாறு கூவி பதிலுரைக்கின்றன.

## இடி - மின்னல்

இலங்கையில் முதல் இடைப் பருவப் பெயர்ச்சிக் காலம் மார்ச் - ஏப்ரல் மாதங் களில் ஆரம்பிக்கின்றது. இக்காலத்தில் காலைவேளையில் கடும் வெப்பம் நிலவும். பகலில் வானில் கருமேகங் களைக் காணலாம். மாலைவேளையில் இடி - மின்னலுடன் மழை பொழியும்.

## மாற்றங்கள் ஏராளம்

மழைக்காலம் ஆரம்பித்தவுடன், முழு சுற்றாட லும் புத்துயிர் பெற்றுவிடும். தாவரங்கள் துளிர்க்கத் தொடங்கும். வண்ணத்துப்பூச்சிகள் முட்டையிட ஆரம்பிக்கும். மரங்கள் பூத்திருப்ப தனால் தேன் கிடைக்கும். எனவே, இக்காலத்தில் தேனீக்களும் வண்ணத்துப்பூச்சிகளும் பூக்களை மொய்க்கத் தொடங்கும். இதனால், பூக்களில் மகரந்தச்சேர்க்கை நிகழும். இது தாவரங்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும். மேலும், இலங்கை வந்திருந்த சுற்றுலாப்பறவைகள் சித்திரை மாதப் பிறப்பை அடுத்து, தாயகம் திரும்புவதைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த. (சா/தர) பெறுபேறுகள்:

# 9A சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகரிப்பு

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் படி, அனைத்துப் பாடங்களிலும் மொத்தமாக 9A பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களைவிட, அதிகரித்திருப்பதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதாவது 2016 ஆம் ஆண்டு 8,224 மாணவர்கள் 9A எடுத்திருந்த நிலையில் இம்முறை 2017 ஆண்டு பரீட்சையில் 9,960 மாணவர்கள் 9A எடுத்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்முறை 6 மாணவர்கள் கூடிய புள்ளிகள் அடிப்படையில் 9A சித்திபெற்று அகில இலங்கை ரீதியில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், 9 மாணவர்கள் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர். இதில், தமிழ்மொழி மூலம் தோற்றிய வேம்படி மகளிர் கல்லூரி மாணவி மிருனி சுரேஷ்குமாரும் அடங்குகின்றார். மேலும், மிருனி சுரேஷ்குமார் தமிழ்மொழிமூலம் அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## 9A பெற்ற முதன்மை மாணவர்கள்


கவீஷ பிரதிபாத் (சீவலி மத்திய கல்லூரி, இரத்தினபுரி)


கசுனி தத்சரனி (ரத்னாவலி பாலிகா வித்தியாலயம், கம்பஹா)


சமோதி சுபசிங்ஹ (ரத்னாவலி பாலிகா வித்தியாலயம், கம்பஹா)


நவோத்யா ரணசிங்ஹ (பெண்கள் உயர் பாடசாலை, கண்டி)


லிமாஷா அமந்தி (மஹாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி)


ரந்தி லக்பிரியா (சுஜாதா பாலிகா வித்தியாலயம், மாத்தறை)


மிருனி சுரேஷ்குமார் (வேம்படி மகளிர் கல்லூரி)




# 969 பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தம்

இம்முறை க.பொ.த. சா/தர பரீட்சைக்குத் தோற்றியோரில் 969 பேரின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. பரீட்சை மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதன் காரணத்தினாலேயே, இவ்வாறு இவர்களின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் இவர்களுக்கு எதிராக எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பரீட்சார்த்திகளில் சிலரது விடைத்தாளில் இரண்டு விதமான கையெழுத்துக்கள் இருப்பதாகவும் சிலர் தமது அடையாள அட்டையை உறுதிப்படுத்தவில்லை எனவும், இன்னும் சிலர் பரீட்சையின்போது, கைப்பேசியை பயன்படுத்தியிருந்ததாகவும் இவ்வாறானோரின் பெறுபேறுகளே இடைநிறுத்தப்பட்டிருப்பதாகவும் இவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

விஜய்
த.பெ.எண் 2037,
கொழும்பு.
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# பௌர்ணமி தினங்களில் தனியார் வகுப்புக்கள் நடத்துவதை தடுக்கவும்...

## ஜனாதிபதியிடம் கோரிக்கை



பௌர்ணமி தினங்களில் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதை தடுக்கும் விதமாக புதிய சட்ட வழிமுறைகள் அமுலாக்குவது தொடர்பில் ஆராய்வதற்கு எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அண்மையில் பௌத்த மகா சங்கத்தினருடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின்போது மகா சங்கத்தினர் முன்வைத்த கோரிக்கையை அடுத்தே, ஜனாதிபதி மேற்கண்ட கருத்தை தெரிவித்துள்ளார். பௌர்ணமி தினங்களில் தனியார் வகுப்புக்கள் நடத்தப்படுவதால் இளம் பிராயத்தினர் அநேகர் வணக்கஸ்தலங் களில் சமயம் சார்ந்த கற்றல்களுக்கு வருவது வெகுவாகக் குறைந்திருப்பதை கவனத்தில் கொண்டே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விரைவில்

க.பொ.த. (சா/தர)
மாதிரி வினாத்தாள்
கணிதம்



கொழும்பிலுள்ள பிரபல பாடசாலையொன்றின் ஆசிரியை வழங்கும் க.பொ.த (சா/தர) மாதிரி வினாத்தாள் 'விஜய்' பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.

விரைவில் எதிர்பாருங்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விண்வெளி வாசல்

நிஜங்களுடன் ஒரு கற்பனைப் பயணம்...

பயணம் - 09

ஜெ.வீபாகர்



மனோஜ்: *VK* வரும்வரைக்கும் காத்திருக்க வேண்டும்.

ராஜசேகர்: நேரம் வீணாகுதே...

பிரனிதா: இப்போ என்னதான் செய்வது!?

இருந்த ஒரே ஒரு சுவடியும் தயாளனின் கையில் இருக்கு... இப்போது மிச்சம் இருப்பது இந்த *cryptex* மட்டும்தான்.

பிரனிதா அதை எடுத்து ஆராய்ந்தாள். அதன் உள் விளிம்புகளை தடவிப்பார்க்கையில், அதனோடு ஒட்டிக் கொண்டிருந்த ஒரு பொருள் கீழே விழுந்தது.

ஆயிஷா: என்ன அது!?

அது கருங்கல்லினால் செய்யப்பட்ட ஒரு சிறிய நீண்ட பொருள். அதன் உருவையும், வெட்டுகளையும் பார்க்கையில் ஒரு சாவி போன்று இருந்தது. ஒரு பக்கம் ஒடுங்கி, நீண்டும், மறுபக்க முனையில் ஒரு மீனின் வடிவிலும் அது வடிவமைக்கப்பட்டிருந்தது. சில நொடிகள் அப்படியே மௌனமாய் கழிந்தன. பின் அஷேன் பேசினான்,

அஷேன்: ஆயிஷா! இங்கே வா...

அஷேன் தனது *penknife* இனை ஆயிஷாவிடம் கொடுத்தான்.


அஷேன்: ஆயிஷா, உன்னுடைய திறமையைப் பயன்படுத்து! உன் நினைவாற்றலைப் பயன்படுத்து! அந்த ஓலை சுவடியில் இருந்ததை மேசையில் கீறு. உன்னால் முடிந்தளவுக்கு... செயற்படு

ஆயிஷா கத்தியை கையில் வாங்கினாள். கண்களை மூடினாள். சில நொடிகளில் கண்களை மறுபடி திறந்து அவள் மனதில் பதிந்த அந்த குறியீடுகளை, மேசையின் மீது, கத்தியின் முனை கொண்டு வரைந்தாள்.

ஆயிஷா: இதுதான்... இது தான் என்று நினைக்கிறேன்...

அனைவரும் கூடி நின்று அவதானித்தனர்.

அஷேன்: ஏதோ எழுத்துக்கள்



மாதிரி இருக்கிறது...

மனோஜ்: ஏதோ எழுத்துக்கள் இல்லை... பழைய தமிழ் எழுத்துக்கள் என்று நினைக்கிறேன்....

பிரனிதா புன்னகைத்தாள். மற்றவர்கள் காரணம் புரியாமல் விழித்தனர்.

பிரனிதா: எழுத்துக்கள் இல்லை... இது எண்கள்...! ... ஆனா மேலே இருக்கும் இந்த இரண்டு சின்னக் கோடுகளும் தான் எனக்குப் புரியவில்லை...

அஷேன்: என்ன சொல்கிறாய்...!?!?

பிரனிதா: இதெல்லாம் அந்தக் காலத்தில் எண்களைக் குறிக்கிறதுக்குப் பயன்படுத்திய தமிழ் குறியீடுகள். ஆனால் அதில் இப்படிக் கோடு போடுகின்ற வழக்கம் இருந்ததாக நினைவில்லை.

ராஜசேகர்: அப்போ இது என்ன நம்பர் என்று தெரியுமா?

பிரனிதா: இல்லை, எனக்கு அந்தளவுக்கு நினைவில்லை...

அஷேன்: தேடிப் பார்ப்பதற்கும் வழியில்லை, எங்களிடம் எந்தக் கருவியும் இல்லையே

ஆயிஷா: இப்போது என்ன செய்வது!?

தடார் என்ற சத்தத்துடன், பூட்டியிருந்த கதவைத் திறந்து கொண்டு வித்தகன் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டவுடன் குழுவினர் மகிழ்ச்சியடைந்தனர். பூட்டுக்களை உடைத்து, கதவுகளை திறப்பதற்கென்றே *VK* ஒரு கருவியை வைத்திருந்தார். அதுவும் அவரது கண்டுபிடிப்புத்தான்.

*VK*: எல்லோரும் சரியாக இருக்கிறீர்களா? யாருக்கும் ஒன்றும் இல்லையே...


மனோஜ்: இல்லை ஒன்றும் இல்லை. ஸ்பார்க் தான்.....

மனோஜ் நடந்தவை அனைத்தையும் கூறிக்கொண்டிருக்க, *VK* ஸ்பார்க்கின் அருகே சென்று பார்த்தார்.

*VK*: வெளியில் தெரிகின்ற மாதிரி எந்த சேதமும் இல்லை. உள்ளுக்கு சேர்கிட்டில் ஏதாவது ஷோர்ட் ஆகியிருக்கும். அஷேன் இதை வச்சுக்கொள். உங்க *phone* எல்லாம் மறுபடி கிடைக்கும் வரைக்கும். அடுத்து என்ன செய்யப் போகின்றீர்கள்??

(தொடரும்)

# அன்பு



அன்று ஒரு நாள் மதிய நேர உணவு இடைவேளைக்கான மணி ஒலித்தது. வழக்கம் போல் பாடசாலையின் பின்வாசல் அருகே மாணவர்கள் கூட்டம். அந்தக் கதவு எப்போதும் பூட்டப்பட்டிருக்கும். இருந்தும் அவர்கள் அங்கே கூடினார்கள்! காரணம், கதவின் மறுபுறத்தில் நின்ற தாத்தாவின் தள்ளுவண்டிக் கடையில் தின்பண்டம் வாங்குவதற்குத்தான். இரும்புக் கம்பிகளின் வழியே கைகளை நீட்டி மாங்காய்த் துண்டு, அன்னாசிக் கீற்று என தங்களுக்குப் பிடித்தவற்றில் ஏதேனும் ஒன்றை வாங்கிக் கொள்வார்கள்.

அவ்வாறு கூடும் மாணவர்களின் மத்தியில் செல்வன் என்ற ஒரு மாணவன் இருந்தான். அவன் ஒரு நாளும் காசு கொடுத்துத் தின்பண்டம் வாங்கியதில்லை. கூட்டத்தினருடன் சேர்ந்து கையை நீட்டி ஏதாவது வாங்கிக் கொண்டு அப்படியே பின் பக்கமாக நகர்ந்து சென்று விடுவான். இது அவனது வழக்கம். நண்பர்கள் இவனது செயலைக் கண்டித்தனர். ஆனால் அவன் கேட்பதாக இல்லை.

ஒருநாள் தள்ளு வண்டிக்காரர் நாவற்பழங்களைக் கொண்டு வந்து விற்பனை செய்தார். செல்வத்திற்கு நாவற்பழம் என்றால் மிகவும் பிடிக்கும். அன்று மதியம் ஏனோ சில காரணத்தினால் சற்று தாமதமாக பின் வாசல் அருகே வந்து சேர்ந்தான். இன்று தன்னால் வழக்கமான முறையில் அவற்றை வாங்க முடியாது என்பதால் அவரிடம், "தாத்தா,.....இப்போ என் கிட்டே காசில்லை!.....நாவற்பழம் கடனாத் தருவீங்களா?....நாளைக்கு சில்லறை தருவேன்..." என்றான்.

சில பழங்களை சிறு பொட்டலங்களாகக் கட்டிக் கொடுத்தார் தாத்தா. கொடுக்கும்போது அவனிடம், "கடனாக எல்லாம் வேண்டாம் தம்பி!.... நான் தினமும் ஒரு பையனுக்கு அன்பளிப்பாக ஏதாவது தின்பண்டம் கொடுப்பேன். இன்னிக்கு அவன் வரவில்லை. அதனால் அதை உனக்குக் கொடுக்கிறேன்!....வைத்துக்கொள்!..." என்றார். செல்வன் திகைத்துப் போனான்! தாத்தா தன்னைத்தான் குறிப்பிடுகிறார் என்பதை உணர்ந் தான். மறு நொடியே கண்களில் நீர் வழிய அவரிடம் மன்னிப்புக் கேட்டான். அன்றில் இருந்து நேர்மையுடன் வாழ்ந்து வந்தான் செல்வன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி பொங்க விளம்பியே வருக வருகவே...!






ஆதிகாலம் தொட்டு நம் முன்னோர்கள் அனைத்து விதமான சக்தி வல்லமைகள் படைத்த சூரியனின் இயக்கத்தைக் கொண்டே காலங்களைக் கணித்தனர். அதன்படியே, நம் தமிழர் பாரம்பரியத்தின் முக்கிய நிகழ்வான சித்திரை புதுவருடமும் சூரியனின் இயக்கத்தைக் கொண்டே கணிக்கப்பட்டுள்ளது. சூரியனின் ஒளியாற்றலானது, மீன ராசியில் இருந்து மேட ராசிக்கு நகர்வதையே சித்திரை புதுவருடமாக கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தை தமிழர்கள் மட்டுமல்லாது, நம் சகோதர இனமான சிங்கள மக்களும் கொண்டாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், ஆங்கில நாட்காட்டியின்படி, ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதியன்று புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

## சித்திரை தினத்தன்று...

இல்லத்தில் உள்ள அனைவரும் அதிகாலை வேளையில் துயில்விட்டு எழுந்து காலைக் கடன்களை நிறைவுசெய்து, இல்லத்தில் உள்ள பெரியோர்களின் ஆசீர்வாதத்துடன், அவர்களின்






கரங்களால் மருத்துநீர் தேய்த்து நீராடுவர். வீட்டிலுள்ள மங்கையர்கள் முற்றத்தில் கோலமிட, ஆடவர்களோ, வீட்டு வாசலில் தோரணங்களைக் கட்டி மகிழ்வர்.

பின்னர், புத்தாடை அணிந்து பூஜையறையில் இறைவனுக்கு பூமாலை சூட்டி சந்தன, குங்கும திலகம் இட்டு பிறந்துள்ள புதுவருடம் அனைவருக்கும் நன்மை பயக்க வேண்டும் என்ற வேண்டுதலுடன் ஆலயம் சென்று இறை வழிபாடுகளை மேற்கொள்வர். பின்னர் தங்கள் இல்லம் திரும்பி மங்கையர்கள் புதுவருடத்திற்காக தயாரித்த பட்சணங்களை அயலவர்களுக்கு வழங்கி, புது வருட வாழ்த்துக்களையும் மகிழ்வுடன் பகிர்ந்துகொள்வர்.

## விளம்பி வருடம்

தமிழர் நாட்காட்டியின்படி, ஆண்டுகள் அறுபதாகப் பிரிக்கப்பட்டு, பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தவகையில், இந்த அறுபது ஆண்டுகளின் பெயர்கள் சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டிற்கும் வழங்கப்படுகின்றன. அதன்படி, இம்முறை தமிழ் நாட்காட்டிக்கு அமைவாக சித்திரை முதலாம் திகதியானது, தமிழ் ஆண்டின் 32 ஆவது ஆண்டான 'விளம்பி' ஆண்டாகப் பிறக்கின்றது.



## மருத்து நீர்

வில்வம், தாழம் பூ, தாமரைப் பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, செங்கழுநீர், அறுகு, அறுகம் புல், பீர்க்கு, பால், கோசலம், கோமேயம், மஞ்சள், திற்பிலி மற்றும் சுக்கு என்பவற்றைக் கொண்டு புத்தாண்டின் முதல் நாள் அன்று ஆலயங்களில் மருத்துநீர் தயாரிக்கப்படுகின்றது. இந்த மருத்து நீரைத் தேய்த்தே புத்தாண்டு நாளில் நீராடுவர்.



## கைவிசேடம்

சித்திரைப் புதுவருடத்தின் மற்றொரு சிறப்பு அம்சம் கைவிசேடமாகும். கைவிசேடம் என்பது கைவிசேட சுபநேரத்தில் குடும்பத்தின் தலைவர், தலைவி அல்லது பெரியோர்கள் கரங்களால் பணக் கொடுக்கல் வாங்கல் புரியும் நிகழ்வுகளே



கைவிசேடமாகக் கருதப்படுகின்றது. குடும்பத்தில் மட்டுமல்லாது, அலுவலகங்கள், விற்பனை நிலையங்கள், தொழிற்சாலைகள் என்பனவற்றில் வேலை செய்வோர் புதுவருடத்தில் முதல் அன்பளிப்பாக வெற்றிலை பாக்குடன், பணத்தை குத்து விளக்கின் முன்னால் வைத்து மூத்தோர் கரங்களால் பெறுவர். இவ்வாறு மூத்தோர்களிடமிருந்து கைவிசேடம் பெறுவதன்மூலம் அந்த ஆண்டு முழுவதும் பணவரவு சிறப்பாக இருக்கும் என்பது நம்பிக்கை. கைவிசேடமாக பெற்ற பணத்தை அந்த ஆண்டு முழுவதும் பத்திரமாக வைத்திருக்க வேண்டும் என்பதும் நம்பிக்கையாக கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது.

**இவ்விளம்பி புதுவருடத்தை கொண்டாடும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் இனிய புது வருட வாழ்த்துக்கள்**

noolaham.org | aavanaham.org

# மனதை மயக்கும் பருவ காலங்கள்

**பி**ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை போன்ற சிறிய நாடுகளில் பருவ கால மாற்றங்களை துல்லியமாகக் காண முடிவதில்லை. எனினும் வெப்பம் மற்றும் குளிர் காலநிலையை தெளிவாகக் காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக, சூரிய ஒளி விழும் அளவுகளுக்கு ஏற்ப சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் பருவ காலத்தினை நான்காக வகுத்துள்ளனர்.



## பூமியின் அச்சு

பூமியின் அச்சானது, வட துருவத்திலிருந்து தென் துருவம் வரை மேலிருந்து கீழ் நோக்கிப் பரவுகின்றது. பூமியின் சுழற்சியும் இந்த அச்சின் அடிப்படையிலேயே இடம் பெறுகின்றது. இந்த அச்சினூடான ஒரு சுழற்சி ஒரு நாளாகக் கணிக்கப்படுகின்றது. இரவு பகல் ஏற்படவும் இதுதான் காரணமாகும். இந்த பூமி அச்சு நேராக உள்ளதுடன் 23.44 பாகை சரிவினைக் கொண்டதாகவும் உள்ளது.

## பூமி அரைக்கோளம்

பூமி இரண்டு கற்பனைக் கோடுகளினால் பிரிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு அரைக் கோளங்களும் வட அரைக்கோளமாகவும், தென் அரைக்கோளமாகவும் கருதப்படுகின்றது.

குளிர் காலத்தில் அதற்கு எதிரான அரைக்கோளப் பகுதியில் கோடை காலமும், இளவேனில் காலத்தில் அதற்கு எதிரான அரைக்கோளப் பகுதியில் இலையுதிர் காலமும் ஏற்படுகின்றது. சூரிய ஒளி பூமியில் விழும் அளவுக்கு ஏற்ப இந்த பருவ கால மாறுதல்கள் இடம் பெறுகின்றன. பொதுவாக 4 பருவ காலங்கள் நிலவினாலும் பூமியின் ஒரு பகுதியில் ஒரு பருவ கால மாற்றம் ஏற்படும் போது


மற்றைய ஓர் இடத்தில் ...
ஏற்படுகின்றது. இங்கு சூ...
ஏற்ப அந்தந்த பருவ கால...
ஏற்படுகின்றது. உதாரண...
அனைவரும் இளவேனில்...
கூறுகின்றனர். ஆனால் ...
அடிப்படையில் ஒரு சில ...
ஆரம்பமாகின்றது.

டிசம்பர் காலத்தில் குள...
ஆரம்பிக்கின்றது. தென்
அரைக்கோளப்

குளிர் காலம் (winter)



இளவேனில் காலம் (Spring)




கோடை காலம் (Summer)



இலையுதிர் காலம் (Autumn)










பகுதியினை சேர்ந்த ...
அதிகரிப்பும் காணப்...
பருவ கால மாற்றங்...
சரிவு நிலையே கார...
சூரியனிலிருந்து பூமி...
பருவ கால மாற்றங்...
என்பதனை இதன் மூ...
முடியும்.

பருவ கால மாற்றத்...
அமைவது பூமியின் ...
அதாவது, பூமி தனது ...
அளவு தென் திசை ...
சரிவு காரணமாக கு...
சூரிய ஒளி கிடைப்ப...
மாறுதல்கள் ஏற்படு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...வறு ஒரு பருவ கால மாற்றம்
...ரிய ஒளி விழும் வீரியத்திற்கு
...ங்களுக்கு முக்கியத்துவம்
...மாக, மார்ச் மாதத்தில்
... காலம் ஆரம்பமாவதாகக்
...ரிய ஒளியின் ஆதிக்கத்தின்
...நாடுகளுக்கு கோடை காலம்

**காலநிலை மாற்றத்திற்கான காரணம் பூமியானது, சாய்வு நிலையில் இருப்பதனாலாகும். அதாவது, பூமியானது அதன் பூகோளச் சுற்றுப்பாதையில் 23.44 பாகை (23.5°) தெற்கு திசையில் சாய்வாக காணப்படுகின்றமையாகும். இந்த சாய்வு நிலை காரணமாக, உரிய இடங்களுக்கு சூரியனின் ஒளியானது, வெவ்வேறு அளவில் கிடைப்பதனாலேயே இவ்வாறு காலநிலை மாற்றங்கள் நிலவுகின்றது.**




## குளிர் காலம் (winter)

இந்த ஆண்டின் ஆரம்பம்

2017 டிசம்பர் 21
2018 மார்ச் 20 வரை

இது அதிக குளிரான காலநிலை கொண்ட பருவ காலமாகும். இந்த காலப் பகுதியில் பல நாடுகளில் பனிப் பொழிவு ஏற்படுகின்றது. இதனால் முழு சுற்றாடலும் பனியால் மூடி வெண்மையாகக் காட்சியளிக்கின்றது. வட அரைக்கோளப் பகுதிக்கு சூரிய ஒளி குறைவாகக் கிடைக்கின்றது. இதனால் வட அரைக்கோளப் பகுதியில் குளிர்காலம் ஏற்படுகின்றது. தென்



அரைக்கோளப் பகுதியில் கோடை காலம் ஆரம்பமாகின்றது.

இந்த காலப்பகுதியில் ஆக்டிக் பகுதி 24 மணி நேரமும் இருளில் மூழ்கியிருக்கும். அந்தாட்டிக் பகுதி 24 மணி நேரமும் பகலாகக் காணப்படும்.

## இளவேனில் காலம் (Spring)

இந்த ஆண்டுக்கான ஆரம்பம்

2018 மார்ச் 20
2018 ஜுன் 21 வரை

இந்த காவப்பகுதியில் பூமியின் பூமத்திய ரேகையில் சூரிய ஒளி விழுகின்றது. இதனால் வட மற்றும் தென் அரைக்கோளப் பகுதிகளில் சூரிய ஒளி தீவிரமடைவதில்லை. பூமியின் வட அரைக்கோளப் பகுதியில் இளவேனில் காலமும், தென் அரைக் கோளப் பகுதியில் கோடை காலமும் உருவாகின்றது.



மேலும், வட அரைக்கோளப் பகுதி நாடுகளுக்கு நீண்ட பகல் பொழுதும், இரவுப் பொழுதும் தென் அரைக்கோளப் பகுதிக்கு குறுகிய பகல் பொழுதும், இரவுப் பொழுதும் ஏற்படுகின்றன.

## கோடை காலம் (Summer)

இந்த வருடத்தின் ஆரம்பம்

2018 ஜுன் 21
2018 செப்டெம்பர் 23 வரை


பூமியின் சாய்வு நிலை காரணமாக, வட அரைகோளப் பகுதியில் 90 பாகை சரிவில் சூரிய ஒளி விழுகின்றது. இக்காலப்பகுதியில் அதிக வெப்பநிலை காணப்படுகின்றது. இக்காலப்பகுதியில் மரங்களின்



இலைகள் உதிர்வதுடன், இது குளிர் காலத்திற்கு முற்றிலும் எதிரான காலப்பகுதியை கொண்டதாகும்

...நாடுகளுக்கு வெப்பநிலை
...படுகின்றது. இதன்படி,
...களுக்கு பூமியின்
...ணமாக உள்ளது.
... உள்ள தூரத்திற்கும்
...களுக்கும் தொடர்பில்லை
...லம் அறிந்து கொள்ள

...திற்கு அடிப்படையாக
...ரிவு நிலையாகும்.
... அச்சில் 23.44 பாகை
...நோக்கி சரிந்துள்ளது. இந்த
...றிப்பிட்ட பகுதிகளுக்கு
...தனால் பருவ கால
...கின்றன.




## இலையுதிர் காலம் (Autumn)

இந்த வருடத்தின் ஆரம்பம்

2018 செப்டெம்பர் 23
2018 டிசம்பர் 22 வரை

பூமியின் சாய்வு நிலை காரணமாக, தென் அரைக்கோளப் பகுதியின் மகர ரேகைப் பகுதியில் 90 பாகை அளவில் சூரிய ஒளி விழுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணிதம்


பெயர்: ................................................

★ கீழ்க் காணும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.


★ *01* ஆம், *02* ஆம் வினாக்களில் முதல் இரண்டு உருக்களுக்கும் உள்ள தொடர்பை அவதானித்து அடுத்து தரப்பட்ட உருவுக்குப் பொருத்தமான உருவை தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

**01.** 

*1.* *2.* *3.*

**02.** 


*1.* *2.* *3.*

**03.** 

இவ்வுருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

*1. 10* *2. 9*
*3. 13* *4. 14*

★ ஒரு தோட்டத்தில் உள்ள மரங்களின் எண்ணிக்கை உருக்களின்மூலம் காட்டப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்திக் கீழ்காணும் இரு வினாக்களுக்கும் விடை தருக.



தென்னை மா பலா வாழை

**04.** இங்கு கூடுதலாகக் காணப்படும் மரங்கள் யாவை?

*1.* தென்னை *2.* மா
*3.* பலா *4.* வாழை

**05.** இங்கு காணப்படும் பலா மரங்களின் எண்ணிக்கை இரண்டு எனின், வாழை மரங்களின் எண்ணிக்கை யாது?

*1. 6* *2. 3* *3. 4* *4. 8*

**06.** *3421* → *6842* எனின், *4103* → ?...... ?

*1. 6325* *2. 8106*
*3. 8206* *4. 8226*

**07.** நான்கு வருடங்களுக்கு ஒருமுறை வருவது லீப் வருடமாகும். இதில் லீப் வருடம் அல்லாத ஆண்டு எது?

*1. 2012* *2. 2030*
*3. 2016* *4. 2020*





**08.** மாங்காய் குவியல் ஒன்றில் உள்ள மாங்காய்களை இரண்டால் வகுக்கும்போது *1* மிகுதியும், மூன்றால் வகுக்கும்போது *2* மிகுதியும் கிடைத்தது எனின், குவியலிலுள்ள மாங்காய்கள் எத்தனை?


*1. 41* *2. 53* *3. 21* *4. 52*

**09.** *13200* இந்த எண்ணிற்கு முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் தருக.


*1. 13190, 13201* *2. 13199, 13201*
*3. 13099, 13201* *4. 13199, 13211*

**10.** 

ஒரு சதுர வடிவான கடதாசியை இரண்டு முறை மடித்து ஒரு துண்டு வெட்டி எடுக்கப்பட்ட அமைப்பு காட்டப்பட்டுள்ளது. இக்கடதாசியை விரித்தால் எவ்வாறு தோற்றமளிக்கும்?



*1.* *2.* *3.* *4.*

**11.** 


அருகில் தரப்பட்டுள்ள உருவில் A, B ஆகியவற்றுக்குப் பொருத்தமான கூற்று பின்வருவனவற்றுள் எது?

*1.* மீனும் இறைச்சியும்
*2.* மரக்கறியும் மீனும்
*3.* காய்கறியும் பழங்களும்
*4.* காய்கறிகளும் வெண்டியும்

**12.** உங்கள் கையில் ஆறு பொத்தான்கள் உள்ளன. இவற்றைக் கொண்டு நீங்கள் ஆக்கக்கூடிய எண் வடிவங்கள் யாவை?

*1.* சதுர எண், செவ்வக எண்
*2.* முக்கோண எண், செவ்வக எண்
*3.* முக்கோண எண், சதுர எண்
*4.* சதுர எண்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

### சுற்றாடல்

(ஏப்ரல் 04 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| *01. 1* | *04. 3* | *07. 4* | *10. 1* | *13. 4* |
| *02. 2* | *05. 4* | *08. 1* | *11. 1* | *14. 3* |
| *03. 3* | *06. 3* | *09. 2* | *12. 4* | *15. 1* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



08

# புதிர் அண்ணா

இதற்கிடையில் புதிர் அண்ணா தயாராகிவிட்டார்.

"சொற்புதிர் தயார். குறித்துக்கொள்ளுங்கள்" என்றவாறு ஆரம்பித்தார் புதிர் அண்ணா.

"நீங்கள் கண்டுபிடிக்க வேண்டியது நான்கு எழுத்துகளைக் கொண்டதொரு சொல்லினை. "ஊர்தி" என்பது அதன் நேரடியான அர்த்தமாகும். இந்த நான்கெழுத்துச் சொல்லின் இரண்டாவது எழுத்தை அழித்துவிட்டுப் பார்த்தால் மீதமாக இருக்கும் எழுத்துக்கள் சேர்ந்து நமக்கெல்லாம் மேலே மிக உயரத்தில் இருக்கும் ஒன்றைக் குறிக்கும்!" என்று நிறுத்தினார். "இந்த நான்கெழுத்துச் சொல்லின் முதல் எழுத்தை விலக்கிவிட்டால் மீதமாக இருப்பவை பாரமாகும். மூன்றாவது எழுத்தை நீக்கிவிட்டால் மீதி எழுத்துகள் குதிரையைக் கொண்டுவந்துவிடும்!" "அட" என்று ஆச்சரியமானாள் நயனியா.

"கண்டுபிடிக்க முடிகிறதா என்று பாருங்கள். நான் ஒரு நண்பரோடு கதைத்துவிட்டு வருகிறேன்.." என்று நகர்ந்தார் புதிர் அண்ணா. நால்வரும் எழுத்துகளோடு போராட ஆரம்பித்தார்கள்.



"சென்ற வாரம் எடைப் புதிர் ஒன்றை உங்களுக்குத் தந்தேன் அல்லவா இன்று உங்களுக்கு சொற்புதிர் ஒன்று தரப்போகிறேன்" என்றார் புதிர் அண்ணா. "சொற்புதிரா? சரி அண்ணா. சொற்புதிருக்கு விடை கண்டு நிறைய நாளாச்சு.." என திரு சொல்ல, மற்றவர்களும் அதனை ஆமோதித்தனர்.

அப்போது பத்திரிகையில் வெளியாகியிருந்த தாமரைக் கோபுரத்தின் (லோட்டஸ் டவர்) படத்தைப் பார்த்த திரு,"தென்னாசியாவிலேயே உயரமான கட்டடமாம்.." என்றான் மெல்லிய குரலில்.

"ஆமாம்.. 350 மீற்றர் உயரமாம்.." என்று தனக்குத் தெரிந்த தகவலையும் பகிர்ந்துகொண்டாள் நயனியா.

## புதிர் அண்ணாவின் புதிர்கள்!

**தங்கை, தம்பிகளே!**

கடந்த வாரம் உங்களிடம் கேட்டிருந்த எடைப் புதிருக்கான விடைகளைக் கண்டுபிடித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். கண்டுபிடிக்க இயலாமல் தடுமாறியவர்களுக்காக அந்தப் புதிரை எவ்வாறு தீர்ப்பது என்று பார்ப்போம்.

சாந்தன், வேந்தன் இருவரதும் எடை 120 கிலோகிராமாகவும் சாந்தன், விவிந்தன் இருவரதும் எடை 90 கிலோகிராமாகவும் இருப்பதால் பொதுவாக இருக்கும் வேந்தனது எடையை நீக்க, அதிக மொத்த எடை 120 கிலோவிலிருந்து 90 கிலோவைக் கழிப்போம். இதிலிருந்து வேந்தனது எடையை விட, விவிந்தனின் எடை 30 கிலோ குறைவாக இருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

அதேவேளை, வேந்தன் மற்றும் விவிந்தனின் எடைகளின் கூட்டுத்தொகை 110 கிலோவாக இருப்பதால் வேந்தனின் எடை 70 கிலோ என்பதை அறியலாம். இதனைக் கொண்டு விவிந்தனின் எடை 40 கிலோ என்றும் சாந்தனின் எடை 50 கிலோ என்றும் கண்டுபிடிக்கலாம்.

இது போல எடைப் புதிர்களை நீங்களே உருவாக்கிப் பயிற்சி செய்யலாம்.

இந்த வாரக் கேள்விக்கான விடையைக் கண்டுபிடிக்க முயற்சி செய்யுங்கள். மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம்.


## விஜய் + தூ வானம் வழங்கும் மாதம் ஒரு சைக்கிள்!

'Thoovaanam' App ஊடாக ஒவ்வொரு வாரமும் தலா ஒரு கேள்வி கேட்கப்படும். இவ்வாறு மாதத்தின் நான்கு வாரத்திலும் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதிலை அவ்வவ் திகதிக்கான 'விஜய்' பத்திரிகை கூப்பனில் நிரப்பி அவற்றை ஒட்டுமொத்தமாக சேகரித்து மாதக் கடைசியில் 'விஜய்' பத்திரிகைக்கு தபாலிடுங்கள்.

(தபாலிட வேண்டிய முகவரி மாதக் கடைசியில் வழங்கப்படும்)




மாதாந்தம் சைக்கிளை வெல்வதற்கான வாராந்த கேள்வியினை அறிந்துகொள்ள உங்கள் Android ஸ்மார்ட் கையடக்க தொலைபேசியில் அல்லது ஏனைய சாதனத்தில் Google Play Store ஊடாக 'Thoovaanam" App இனை நிறுவிக்கொள்ளுதல் (Install) வேண்டும். இதனை நிறுவ Thoovaanam என Google Play Store இல் தேடிப் பெற்றுக்கொள்ளவும்.

'விஜய்' கூப்பனில் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் விடைகள் மாத்திரமே போட்டிக்குத் தெரிவு செய்யப்படும்.

சரியான விடைகளை அனுப்புவோரில் அதிஷ்டசாலியாக தெரிவுசெய்யப்படும் ஒரு நபருக்கு சைக்கிள் பரிசாக வழங்கப்படும்.

இவ் 'Thoovaanam' App ஊடாக தினமும் நடப்பு தகவல்கள், வேலைவாய்ப்பு மற்றும் பொது அறிவுத் தகவல்கள் போன்ற இன்னும் பல விடயங்களை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'Thoovaanam' App தேடும் முறை:

GET IT ON Google Play




(இச்சேவை முற்றிலும் இலவசம்)




**இவ்வார கூப்பன்:**

11.04.2018

விடை: ..............................

பெயர்: ..............................

முகவரி: ..............................

தெ.பே.இல: ..............................

பாடசாலை: ..............................

..............................

தரம்: ..............................

..................

கையொப்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## எங்கே மனிதனின் ஒழுக்க நெறி?



பாதையில் கிடந்த குப்பையை
பொறுக்கி என் பையில்
போட்டேன் - என் நண்பி
பைத்தியமா என்றாள்...!

ஏறும்போது பஸ்ஸில்
பின் பக்கமாக ஏறினேன்
ஒருத்தி இறங்க வழிவிடு
என்றாள்...!

வீதியில் உயிருக்குப் போராடிக்
கொண்டிருந்த ஒருவரை
காப்பாற்ற முயன்றேன் - ஒருவன்
என்னை தடுத்து வீண்வம்பு என்றான்...!

இறைவா மனிதர்களின்
ஒழுக்க நெறி எங்கே என்றேன்
கேலியாக அடுத்த சந்ததிகளுக்காக அதை
அவர்கள் செலவழிக்காது
சேமிக்கின்றனர் என்றார்...!

பாத்திமா அஸ்ரா முஹம்மட்,
மா/ரூரிவெல ஹமீதியா கல்லூரி,
உக்குவெல.

## தெற்காசியா

தெற்காசியா ஒரு பிரத்தியேகமான புவியியல் பிரதேசமாகும். கடல் மட்டத்தில் அமைந்துள்ள சுந்தர்ப்பான் சதுப்பு நிலமும், உலகின் அதிக உயரத்தினைக் கொண்ட எவரெஸ்ட் மலைச் சிரகமும் இவ்வலயத்திலேயே அமைந்துள்ளது.

### தெற்காசியப் பிரதேசத்தின் எல்லைகள்

வடக்கில் இமயமலைத் தொடராலும், தெற்கில் இந்து சமுத்திரத்தாலும், கிழக்கில் வங்காள விரிகுடாவாலும், மேற்கில் அரேபியக் கடலாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது.

### சார்பு அமைவிடம்

வட கோளத்தில் மத்திய கோட்டிலிருந்து (OO அலக்கோடு) வட அகலக்கோடு 380 வரையும், கிழக்கு நெடுங் கோடு 600-1000 வரையும் பரந்துள்ளது. புவியின் மொத்த நிலப்பரப்பில் 3 வீதம் இப்பிர தேசமாகவே உள்ளது.




தென்னாசியப் பிரதேசத்தின் அமைவிடம்

தெற்காசியப் பிரதேசத்தில் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, இலங்கை ஆகிய நாடுகள் உள்ளடங்குகின்றன. நிக்கோபார் மற்றும் அந்தமான் தீவுகளும் தெற்காசியப் பிர தேசத்துக்கு உரியவையாகும். தெற்காசிய பிரதேசத்தில் அமைந்துள்ள சார்க் அமைப்பில் ஆப்கானிஸ்தான் உறுப்புரிமை பெற்றிருப்பினும் புவியியல் ரீதியில் அது மத்திய ஆசியப் பிர தேசத்துக்கு உரித்தானதாகும்.

எஃப்.அஸ்ஃபா,
தரம்-08, மதீனா தேசிய பாடசாலை.

## உயிரெழுத்தும் அறிஞர் அண்ணாவும்



ஆங்கில அரிச்சுவடியில் A, E, I, O, U என்பன உயிரெழுத்துக்களாகும். இதில் A என்பது மிக முக்கியமான உயிரெழுத்தாகும். இவ் எழுத்து தொடர்பாக, சுவாரஸ்யமான ஒரு கதை உண்டு. இந்தியாவில் சிறந்த கல்விமான்களில் ஒருவரான அறிஞர் அண்ணா ஒரு தடவை வெளிநாட்டில் ஓர் உரையை நிகழ்த்திக் கொண்டு இருக்கும்போது அவையிலிருந்த நபர் ஒருவர் அறிஞர் அண்ணாவை அறிவின் மூலம் வீழ்த்த வேண்டும் என எண்ணி ஒரு வினாவை அதிரடியாகத் தொடுத்தார். 'A' எனும் ஆங்கில உயிர் எழுத்து அற்ற ஆங்கில நூறு சொற்களை கூறுமாறு கேள்வியைத் தொடுத்தார். அவையே அமைதியானது. சில நொடிகளில் எவ்வித பதற்றமும் இன்றி புன்னகைத்தவாறு அறிஞர் அண்ணா விடையளித்தார். One, Two, Three, Four, Five என்று நூறு வரை எண்களை ஆங்கில சொற்களில் கூறினார். அறிஞர் அண்ணாவின் அறிவை மெச்சி அவையே புகழ்ந்தது.

எஃப்.அகீலா, தரம்-13,
மாத்தளை மின்ஹாஜ் மகா வித்தியாலயம், நிககொல்ல.



## மாணவர் ஆக்கங்கள்


## அப்பா



அன்பானவர் அப்பா
ஆசையுடையவர் அப்பா
இரக்கமுடையவர் அப்பா
ஈகை உள்ளம் கொண்டவர் அப்பா
உண்மையானவர் அப்பா
ஊக்கம் கொடுப்பவர் அப்பா
எல்லாம் தருபவர் அப்பா
ஏணிப்படியானவர் அப்பா
ஐயம் நீக்குபவர் அப்பா

வ.பவிசாலி, தரம்-05A,
தி/சென் மேரிஸ் கல்லூரி, திருகோணமலை.

## அல்பர்ட் ஐன்ஸ்டைன்
### (நோபெல் பரிசு பெற்ற ஜேர்மன் நாட்டு விஞ்ஞானி)



அல்பர்ட் ஐன்ஸ்டைன் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதியன்று ஜேர்மனியின் உல்மாவில் ஒரு யூதக் குடும்பத்தில் பிறந்தார். இவர் சிறுவனாக இருந்த சமயம் ஆரம்பக் கல்வியை கற்பதற்காக மியூனிக் நகர ஆரம்பப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். தனது 12 ஆவது வயதில் ஐன்ஸ்டைனின் மாமனார் அவருக்கு அட்சர கணிதப் புத்தகம் ஒன்றை பரிசாகக் கொடுத்தார்.பிற்காலத்தில் மாபெரும் விஞ்ஞானியாக வளர்ந்த ஐன்ஸ்டைன் "தனது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்தது அந்தப் புத்தகமே" என்று கூறியிருந்தார். ஐன்ஸ்டைனின் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இடைவெளி (space), காலம் (time) மற்றும் (gravitation) ஆகியன தொடர்பில் புதிய சித்தாந்தங்களுக்கு வழிவகுத்தன. ஹிட்லர் ஜேர்மனியில் ஆட்சிபீடம் ஏறியதும் ஐன்ஸ்டைன் ஜேர்மனியை விட்டு வெளியேறி அமெரிக்காவில் நிரந்தரமாக குடியேறினார். 1921 ஆம் ஆண்டு ஐன்ஸ்டைனுக்கு பௌதீகத் துறைக்கான நொபெல் பரிசு வழங்கப்பட்டது. உலக சமாதானத்திலும் அக்கறை செலுத்தி வந்த இவர் அமெரிக்காவின் ப்ரின்செடோனில் 1955 இல் காலமானார்.

டி.டிசன்,தரம்-09,
சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயம்

★ இரவு பகல் உண்டாக காரணம் என்ன - புவிச்சுழற்சி

★ தமிழ்மொழி இராமாயணத்தை எழுதியவர் யார் - கம்பர்

★ உலகில் ஆகக் கூடிய பதிப்புரிமை பெற்ற நூல் எது -கின்னஸ் புத்தகம்

★ ஒருவர் தன்னைப் பற்றி கூறுவது எவ்வாறு அழைக்கப்படும் - சுயசரிதை


ஜெ.கிஷான் அபிசேக்,
பது/கோணகலை தமிழ் ஆரம்ப பாடசாலை,
பசறை.

நீங்களும் ஆக்கங்களை அனுப்பலாம்

முகவரி
மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல 2037,
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## A பகுதியைப் போன்றே B பகுதியைப் பூரணப்படுத்தி நிறந்தீட்டுக




விஜய் PLUS


## '?' உள்ள இடத்தில் வர வேண்டிய பகுதியை வெட்டி ஒட்டுக




## சாப்பிடக்கூடியவற்றில் '✓' அடையாளமிடுங்கள்




## இலக்கங்களுக்கமைய புள்ளிகளை இணையுங்கள்




நுளஸ்ஜ் - I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன், பாடசாலை மாணவர்களுக்கான ஓவியப் போட்டியொன்றில் கலந்துகொள்ள விண்ணப்பித்திருந்தான். ஓவியப் போட்டிக்கான தலைப்பு 'கடலில் செல்லும் கப்பல்' என்பதாகும். ஓவியப் போட்டி ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. அதனால், ஜோன் தினமும் மாலையில் குறித்த தலைப்பில் ஓவியம் வரைந்து பழகினான். இன்று நீங்களும் இங்குள்ள வரைபலகையில் ஒரு கப்பலை வரைந்து காட்டி ஜோனுக்கு உதவிடுங்கள் பார்க்கலாம்...



01. ஜோன் என்ன போட்டியில் கலந்துகொள்ளவுள்ளான்?

..............................................

02. போட்டி எப்போது நடைபெறவுள்ளது?

..............................................

03. போட்டிக்கான தலைப்பு யாது?

..............................................

04. தினமும் மாலையில் ஜோன் என்ன செய்வான்?

..............................................

*01.* பின்வரும் பொழுதுபோக்குகளை உரிய படத்தின்கீழ் எழுதுக.

| | | |
|---|---|---|
| ஆற்றில் நீந்துதல் | கால்பந்து விளையாடல் | மீன் பிடித்தல் |
| சைக்கிள் ஓட்டுதல் | ஓடுதல் | புகைப்படம் எடுத்தல் |



..............................



..............................

*02.* நீர்நிலைகளுடன் சம்பந்தப்பட்ட பொழுதுபோக்குகள் எவை?

..............................................

*03.* உங்கள் பொழுதுபோக்குகளை குறிப்பிடுங்கள்.

..............................................



..............................



..............................

*04.* உங்களது நெருங்கிய நண்பர்கள் இருவரின் பொழுதுபோக்குகளைக் குறிப்பிடுங்கள்.

..............................................



..............................



..............................






*01.* படத்தில் காணப்படும் பழங்களைக் குறிப்பிடுங்கள்.

..............................................

*02.* இங்கு என்னென்ன மரக்கறிகள் உள்ளன?

..............................................

*03.* கூடுதலாக இருப்பவை மரக்கறிகளா? பழங்களா?

..............................................

*04.* இவற்றில் உங்களுக்கு விருப்பமான பழங்கள் எவை?

..............................................

*01.* இந்த இடம் யாது?

..............................................

*02.* இங்கே சிறுவர்கள் என்ன செய்கின்றனர்?

..............................................



*03.* எத்தனை சைக்கிள்கள் உள்ளன?

..............................................

*04.* மரத்திற்குப் பின்னால் மாடிக் குடியிருப்புக்கள் உள்ளன. இக்கூற்று;


1. சரியானது 2. பிழையானது

-ஜீநு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வழி காட்டுங்கள்







A படத்தை அவதானித்து B படத்திலுள்ள வித்தியாசங்களில் X அடையாளமிடுக









## எத்தனை உள்ளன?








## அறிவுக்கு விருந்து (28.03.2018) விடைகள்







## குறுக்கெழுத்துப் போட்டி: 287

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 |
| | ■ | | | | 4 |
| | ■ | ■ | | ■ | |
| | ■ | | 5 | ■ | |
| ■ | ■ | | ■ | | 6 |
| 7 | | 8 | | ■ | |

### மேலிருந்து கீழ்

1. கைவிரலில் அணியப்படுவது.
2. குதிரை.
3. அனுமான். (குழம்பியுள்ளது)
5. குருதி. (குழம்பியுள்ளது)
8. மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகியவற்றை உள்ளடக்கிய தேர்தல் மாவட்டம். (குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்

1. வாசனை உணர்ந்து அறிவதைக் குறிக்கும்.
4. இரவு. (மாறியுள்ளது)
5. உனது. (மாறியுள்ளது)
6. வேர். (மாறியுள்ளது)
7. தேன்கூடு.

## குறுக்கெழுத்துப் போட்டி: 286

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மொ | த் | த | ம் | ■ | 2 மா |
| ந் | ■ | 3 ப | ■ | 4 பா | லை |
| 5 த | 6 மி | ர் | ழ | ■ | ■ |
| ன் | 7 கா | ■ | ■ | 8 மு | ன் |
| ■ | ய் | 9 நோ | ■ | டு | 10 வ |
| ■ | ள | ■ | ம் | க | 11 யு |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜய் விழா உலா
த.பெ.எண் 2037
கொழும்பு



ஹாலி எல தோட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற வொலிபோல் போட்டிகளில் வேவல்ஹின்ன தமிழ் வித்தியாலயத்தின் 16 வயதின் கீழ் மற்றும் 18 வயதின் கீழான பெண்கள் வொலிபோல் அணிகள் முதலாம் இடத்தைப் பெற்று வலய மட்டப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளன. மேற்படி அணியினரையே இங்கு காண்கிறீர்கள். (தகவல்: ந.மலர்வேந்தன்)









பசறை தமிழ் தேசிய பாடசாலையில் இவ்வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன்கருதி இலங்கை வங்கி ஏற்பாடு செய்து நடாத்திய இலவச கற்றல் வழிகாட்டல் செயலமர்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது தமது தாயாரை இழந்த மாணவி எச்.பி.ஜி.சியங்கனாவிற்கு 05 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை இவரின் தந்தையாரிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் இலங்கை வங்கியின் பிரதேச முகாமையாளர் சுமனா ஹெட்டியாரச்சி உட்பட, மேலும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.



எ.டனுஸ்கர்,
ஹாலி எல தமிழ் மகா வித்தியாலயம், பதுளை.



ஜெ.பிரைான்,
இராகலை தமிழ் மகா வித்தியாலயம்,
இராகலை.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு

## உணவைக் கக்கும் பறவை



'ஜயன்ட் பெட்ரெல்' என்பது ஒருவகைக் கடல் பறவை ஆகும். பனிக்கட்டிகள் நிறைந்த கடல் பிரதேசங்களில் இவை அதிகமாகக் காணப்படுகின்றன. இப்பறவைகள் தரையில் இருக்கும்போது, அளவுக்கு அதிகமாக உணவை உண்ணுகின்றன. எனினும், பறக்க ஆரம்பிக்கும்போது, தமது உடல் கனமில்லாமல் இருப்பதற்காக ஓரளவு உணவை கக்கிவிடுகின்றனவாம்.



பா.தினகரன்,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி.

அ.ற.பா.அஃப்றா,
கமு/அல் மதீனா வித்தியாலயம்,
மருதமுனை-03.





எம்.ரம்ஸான்,
க/மீரா மத்திய கல்லூரி,
கடுகஸ்தோட்டை.



ர. தினோஷன்,
புதுக்குளம் மகா வித்தியாலயம்,
வவுனியா.

## மருந்தாகும் உயிரினங்கள்



ஆழ்கடல் பிரதேசங்களில் பலவகையான உயிரினங்கள் காணப்படுகின்றன. இவற்றில் பல மனிதருக்கு நன்மைகளையும் தீமைகளையும் விளைவிக்கின்றன. அந்தவகையில், சிலவகை கடல் நத்தைகளில் இருந்து எடுக்கப்படும் திரவம், மனிதர்களுக்கு குருதி ஓட்டத்தை ஒழுங்குபடுத்த உதவும் மருந்தாகின்றது. இதேபோல், 'கடல் முள்ளெலி நட்சத்திர மீன், கடல் பஞ்சு' போன்றவைகளும் மருந்தாகப் பயன்படுகின்றன.



என்.சதுன் பிரசாத்குமார்,
மாறை/கொடபிடிய ஸதாத் மகா வித்தியாலயம்,
அக்குரஸ்ஸ.



சி.அரிதரன்,
க/கலைமகள் தமிழ் வித்தியாலயம்,
மாவத்தூர்-07.



ச.கேஷினூன்,
கமு/உவெஸ்லி உயர்தரப் பாடசாலை,
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு சேவையில்

# கட்டாக்காலி நாய்கள்



உரிமையாளர்கள் இல்லாத நாய்களே 'கட்டாக்காலி நாய்கள்' அல்லது 'தெருநாய்கள்' எனப்படுகின்றன. இத்தகைய நாய்கள் குறித்து எந்தவொரு கட்டுப்பாடும் பராமரிப்பும் இல்லாததனால், அவை விரைவில் பெருகிவிடுகின்றன. மேலும், இவற்றினால் மனிதர்கள் விசர்நாய்க்கடி நோய் போன்ற பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகும் சாத்தியமும் அதிகம். எனவே, சில நாடுகள் அங்குள்ள கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இன்னும் சில நாடுகள் அவற்றைக் கொன்றுவிடும் திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன. எனினும், தாய்லாந்து நாட்டில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைக்கு தீர்வு காண சிறந்ததொரு திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. தெருவில் அலைந்து திரியும் இத்தகைய நாய்களை சுதந்திர பாதுகாப்பு படையணியாக மாற்றிக்கொள்வதே அத்திட்டமாகும்.



Soi Dog Foundation என்ற அமைப்பினால் முன்னெடுக்கப்படும் இந்த திட்டம், முதலில் தாய்லாந்தின் ஃபுகெட் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அங்கு தெருவில் அலைந்து திரியும் நாய்களுக்கு ரகசிய பாதுகாப்பு கெமராக்கள் பொருத்தப்பட்ட பாதுகாப்பு அங்கிகள் அணிவிக்கப்பட்டன. நாய் குரைக்கும்போது கெமரா இயங்க ஆரம்பிக்கும். அப்போது, ஸ்மார்ட் கைத்தொலைபேசி app மூலம் அந்த நாய் இருக்கும் பிரதேசத்தின் படக் காட்சிகளும் தகவல்களும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களின் ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளுக்கு அனுப்பப்படும். இதன்மூலம் அப்பிரதேசத்தில் நடக்கும் சம்பவங்கள் பற்றி அந்த மக்கள் அறிந்துகொள்ள முடியும்.

பாதுகாப்பு அங்கியை அணிந்துள்ள நாய்கள் தேவையின்றிக் குரைத்தால், அதிலுள்ள கெமரா இயங்க மாட்டாது. மாறாக, சந்தேகத்திற்குரிய ஏதேனுமொன்றைக் கண்டு குரைத்தால்தான் கெமரா இயங்கும். ஏனெனில், நாயின் சந்தேகத்திற்குரிய குரைத்தலை இனங்காணக்கூடிய வகையில்தான் அதன் பாதுகாப்பு அங்கியில் உணர்கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන்
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

අම්මා: දුව, මම පොළට යනවා. ඔයත් එනවාද?
துவ, மம பொளட்ட யனவா. ஒயத் எனவாத?
அம்மா: **மகள், நான் சந்தைக்குப் போகிறேன். நீயும் வருவியா?**

දුව: හා අම්මේ, මමත් එන්නම්.
ஹா அம்மே, மமத் என்னம்.
மகள்: **சரி அம்மா, நானும் வருகிறேன்.**

අම්මා: මේ බෑග් දෙක ගන්න දුව.
மே பேக் தெக கன்ன துவ.
அம்மா: **இந்த இரண்டு பைகளையும் எடுங்கள் மகள்.**

දුව: ඇයි අම්මේ බෑග් දෙකක්?
எய் அம்மே பேக் தெகக்?
மகள்: **இரண்டு பைகள் எதற்கு அம்மா?**

අම්මා: අවුරුද්දට ඕන කරන බඩු ටිකක් ගන්න.
அவுருத்தட்ட ஓன கரன படு டிகக் கன்ன.
அம்மா: **புது வருடத்திற்குத் தேவையான சாமான்கள் சில வாங்குவதற்கு.**

දුව: ඒ මොනවාද අම්මේ?
ஏ மொனவாத அம்மே?
மகள்: **அதென்ன அம்மா?**

අම්මා: රසකැවිලි හදන්න සීනි, පිටි, හාල්, පැණි ගන්න ඕනේ.
ரசகெவிலி ஹதன்ன சீனி, பிட்டி, ஹால், பெணி கன்ன ஓனே.
அம்மா: **பலகாரம் செய்ய சீனி, மா, அரிசி, பாணி வாங்க வேண்டும்.**

දුව: ගෙදර රසකැවිලි හදනවාද අම්මා?
கெதர ரசகெவிலி ஹதனவாத அம்மா?
மகள்: **வீட்டில் பலகாரம் செய்கிறீர்களா அம்மா?**

අම්මා: ඔව් දුව. ගෙදර කෑම ජාති හදන්න ඕනේ.
ஒவ் துவ. கெதர கேம ஜாதி ஹதன்ன ஓனே.
அம்மா: **ஆம் மகள். வீட்டில் பலகார வகைகள் செய்ய வேண்டும்.**

: තව සුභ නැකතට කිරි උතුරුවන්නත් ඕනේනේ. ඒකට අලුත් මුට්ටියක් ගන්නත් ඕනේ.
தவ சுப நெகதட்ட கிரி உதுருவன்னத் ஓனேனே. ஏகட்ட அலுத் முட்டியக் கன்னத் ஓனே.
: **மேலும் சுப நேரத்தில் பால் பொங்கவும் வேண்டுமே. அதற்கு புதிய பானையொன்று வாங்கவும் வேண்டும்.**

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. ............ දෙක ගන්න දුව.
2. හාල්, ........... ගන්න ඕනේ.
3. ගෙදර ............... හදනවාද?




## Did எனும் துணை வினைச்சொல்லை, வாக்கியங்களில் உதவிபுரியும் வினைச்சொல்லாகக் கையாளும் முறை

★ **Did** எனும் துணை வினைச்சொல்லை (Auxiliary verb), உதவிபுரியும் வினைச்சொல்லாகக் (Helping verb) கையாண்டு, இறந்தகால தனி வாக்கியங்களின் 'வினா' நிலை வாக்கியங்களை அமைத்தோம் அல்லவா?

★ இனி அந்த 'வினா நிலை' வாக்கியங்களின் முன்னால் What, Where, How, When, How much முதலான வினாச்சொற்களைக் கையாண்டு அமைக்கப்பட்ட 'வினா' நிலை வாக்கியங்களை மேலும் இங்கே பயில்வோம்.

அ) You met the bank manager yesterday.
நீ நேற்று வங்கி முகாமையாளரை சந்தித்தாய்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative sentence)

ஆ) Did you meet the bank manager yesterday?
நீ நேற்று வங்கி முகாமையாளரை சந்தித்தாயா?
(வினா வாக்கியம் - Interrogative sentence)

★ You met. (Affirmative)
நீ சந்தித்தாய். (உடன்பாடு நிலை)

★ Did you meet? (Interrogative)
நீ சந்தித்தாயா? (வினா நிலை)

★ When did you meet? (Interrogative)
நீ எப்போது சந்தித்தாய்? (வினா நிலை)

★ When did you meet the manager?
நீ எப்போது முகாமையாளரை சந்தித்தாய்?
(வினா வாக்கியம் - Interrogative sentence)

★ I met the manager last Monday.
நான் கடந்த திங்கள் அன்று முகாமையாளரை சந்தித்தேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative sentence)

★ At what time did you meet? (Interrogative)
நீ எத்தனை மணிக்குச் சந்தித்தாய்? (வினா நிலை)

★ At what time did you meet him?
நீ அவரை எத்தனை மணிக்குச் சந்தித்தாய்?
(வினா வாக்கியம் - Interrogative sentence)

★ I met him at 9 o'clock in the morning.
நான் அவரை காலையில் 9 மணிக்குச் சந்தித்தேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative sentence)

★ Where did you meet? (Interrogative)
நீ எங்கே சந்தித்தாய்? (வினா நிலை)

★ Where did you meet him?
நீ அவரை எங்கே சந்தித்தாய்?

★ I met him at the bank.
நான் அவரை வங்கியில் சந்தித்தேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷ் பயிற்சியாளராக கேர்ஸ்டன்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக தென்னாபிரிக்காவின் முன்னாள் வீரர் கேர்ஸ்டன் நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கு முன்னர் 2011 ஆம் ஆண்டில் இந்திய அணிக்கு இவரே பயிற்சியாளராக இருந்ததுடன், அதன்போது 2011 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இந்திய அணி வெற்றியீட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

விஜய் ஸ்போர்ட்ஸ்



# ரஷ்ய கால்பந்து போட்டிகளை பகிஷ்கரிக்க இங்கிலாந்து திட்டம்

எதிர்வரும் ஜூன் மாதம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியை இங்கிலாந்து உட்பட, பல நாடுகள் பகிஷ்கரிக்கப் போவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

உளவாளி ஒருவர்மீது இரசாயனத் தாக்குதல் நடத்திய சம்பவமொன்றைக் காரணமாகக் காட்டி அதற்கு எதிர்ப்பைக் காட்டும் விதமாகவே இப்போட்டியை பகிஷ்கரிக்கத் திட்டமிடுவதாக இங்கிலாந்து அறிவித்துள்ளது. இங்கிலாந்தைத் தொடர்ந்து ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகளும் உலகக் கிண்ணத்தை பகிஷ்கரிக்க ஆலோசித்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

# புற்றுநோயாளி வென்ற தங்கம்



புற்று நோய் காரணமாக, இரண்டு சத்திர சிகிச்சைகளுக்கு முகம்கொடுத்திருந்த நிலையில் மூன்றே வாரங்களின் பின்னர் பாராலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டு தங்கப் பதக்கமொன்றை வென்ற வீராங்கனை ஒருவரைப் பற்றி ஊடகங்களில் பெரிதும் பேசப்பட்டுள்ளது. அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பராலிம்பிக் போட்டியின்போது மென்டல் ஸ்பீ என்ற வீராங்கனையே பனிச்சறுக்கல் போட்டியில் இவ்வாறு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். இவருக்கு இவ்வாறு புற்றுநோய் ஏற்பட்டது இது 9 ஆவது தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஃபெடரர் இல்லை...



'க்ளேகோட்' டென்னிஸ் தொடரிலிருந்து விலகுவதாக ரொஜர் ஃபெடரர் அறிவித்துள்ளமையினால் இந்த வருடம் நடைபெறவுள்ள பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் போட்டியிலும் அவர் இடம்பெற மாட்டார் என அறியவருகின்றது. உடல் உபாதையின் காரணமாகவே ஃபெடரர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக பிரான்ஸ் பகிரங்க டென்னிஸில் ஃபெடரர் கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் இறுதியாக 2009 ஆம் ஆண்டில்தான் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸில் கலந்துகொண்டிருந்தார்.

# கேள்விக்கு பதிலும் பதிலிலிருந்து கேள்வியும்!

91 விளாடிமிர் இலியிச் லெனின் தலைமையேற்ற புரட்சியின் பெயர் என்ன?



ரஷ்ய புரட்சி

92 ரஷ்ய புரட்சி எத்தரப்புகளுக்கிடையில் ஏற்பட்டது?

போல்சேவிக்குகள் மற்றும் மென்சேவிக்குகளுக்கிடையில்

93 போல்சேவிக்குகள் என்போர் யார்?

தொழிலாளர்கள் மற்றும் மென்சேவிக்குகளுக்குரிய காணிகளில் விவசாயம் செய்த விவசாயிகள்

94 மொன்சேவிக்குகளுக்கு எதிராக கிளம்பிய போல் சேவிக் இராணுவத்தினரை எப்பெயரால் அழைத்தனர்?



செம்படை

95 செம்படை மற்றும் சோவியத் மக்கள் இரண்டாம் உலகப் போரின் போது பெற்றுக் கொண்ட வெற்றி என்ன?

கிழக்கு ஐரோப்பாவையும் சோவியத் தேசத்தினையும் ஹிட்லரின் ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாத்தமை

96 சோவியத்துக்கு ஆதரவளித்த நாடுகள் எவை?

சீனா, லாவோஸ், கொரியா, வியட்நாம்

97 வியட்நாம் விடுதலைப் போரின் முன்னோடியாக திகழ்ந்தவர் யார்?



ஹோச்சிமிங்

98 ஹோச்சிமிங்கினால் பிரான்சிய காலனித்துவத்திற்கு எதிராக எழுச்சி பெற உருவாக்கப்பட்ட இராணுவம் எப்பெயரால் அழைக்கப்பட்டது?

வியட்நாம் பொதுமக்கள் படை

99 வியட்நாம் முன்பு எப்பெயரால் அழைக்கப்பட்டது?

இந்து சீனா என்று அழைக்கப்பட்டது

100 இந்து சீனாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு செய்த நாடுகள் எவை?

ஜப்பான், பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மரபுரிமை

# பாடசாலை ம




**பாடசாலை ஒன்றின் மரபுரிமைகளை ஒன்றுசேர்க்கும் ஓர் இடமாக 'பாடசாலை மத்தியநிலையம்' திகழ்கின்றது. 'பாடசாலை மரபுரிமை' என்பது தேசிய மரபுரிமையின் ஆரம்ப இடம் ஆகும். வருடம்தோறும் பாடசாலைகளில் புதிய மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அவ்வாறே, ஒவ்வொரு வருடமும் பாடசாலையிலிருந்து மாணவர்கள் விலகிச் செல்கின்றனர். மாணவர்கள் மட்டுமல்லாமல், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களும்கூட பாடசாலைகளுக்கு வந்து செல்கின்றனர். எனவே, பாடசாலையோடு சம்பந்தப்பட்ட இச்செயற்பாடுகள் குறித்த தகவல்களை சேகரிப்பது அத்தியாவசியமாகும். இவை போன்ற பாடசாலை சம்பந்தப்பட்ட தகவல் சேகரிப்பே பாடசாலை மரபுரிமை எனக் கருதப்படுகின்றது.**

**எனினும், எந்தவொரு பாடசாலையிலும் தமது மரபுரிமை தகவல்கள் சேகரிக்கப்படுவதுமில்லை; காட்சிப்படுத்தப்படுவதுமில்லை. இந்நிலையானது, பாடசாலை ஒன்றின் மாபெரும் குறைபாடாகவே கருதப்படுகின்றது. அந்தவகையில், பாடசாலை மரபுரிமைகளைப் பாதுகாக்கும் பாடசாலை மத்தியநிலையம் ஓர் அரும்பொருட்காட்சியகம் என்றே கூறப்பட வேண்டும்.**



## எமது மரபுரிமை

எந்தவொரு நாட்டிலும் 'எமது மரபுரிமை' என குறிக்கப்படுவது அந்நாட்டின் தேசிய மரபுரிமைகள் ஆகும். அதன்படி, ஒரு நாட்டின் தேசிய மரபுரிமைகளை ஒன்று சேர்க்கும் இடங்களாக அரும்பொருட் காட்சியகம், ஆவணக்காப்பகம் மற்றும் நூலகங்கள் என்பன திகழ்கின்றன. எமது நாட்டில்கூட, தேசிய மரபுரிமைகளைப் பாதுகாக்கின்ற-ஆவணப்படுத்துகின்ற இடங்களாக அரும்பொருட்காட்சியகம், தேசிய ஆவணக்காப்பகம் மற்றும் தேசிய நூலகம் என்பன செயற்படுகின்றன.

இவை அனைத்தும் ஒரு நாட்டுக்கும் சமூகத்திற்கும் உரிய சொத்துக்கள் ஆகும். தேசிய மட்டம், மாகாண மட்டம், பிரதேச மட்டம் என அவை விரிவடைகின்றன. அதன்படி, ஒவ்வொரு மாகாணம் மற்றும் பிரதேசத்திலும் அந்தந்த மாகாணத்திற்குரிய மற்றும் பிரதேசத்திற்குரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் இடங்கள் உள்ளன. இவ்விடங்களுக்குச் சென்றால், தாம் வாழும் பிரதேசங்களின் மரபுரிமைகள் குறித்து அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும்.

## பாடசாலை வளங்கள்

ஒரு பாடசாலைக்கென ஏராளமான வளங்கள் உள்ளன. எனினும், பாடசாலையில் இருப்போருக்கு தம் வசம் உள்ள வளங்கள் குறித்த அக்கறையோ, அவற்றின் பெறுமதி குறித்த உணர்வோ மிகவும் குறைவாகும். அந்த வளங்கள் தமது பாடசாலைக்கும் தமக்கும் உரிய பெறுமதி மிக்கதும் பெருமைக்குரியதுமான சொத்துக்களாகும் என்ற எண்ணம் உருவாகாமல் இருப்பதே, இதற்கான காரணமாகும்.




## பாடசாலை வளங்கள் எவை?

- ★ புகழ்பெற்ற பழைய மாணவர்கள்
- ★ புகழ்பெற்ற அதிபர்கள்
- ★ புகழ்பெற்ற ஆசிரியர்கள்
- ★ பாடசாலை பெற்ற வெற்றிகள்
- ★ பாடசாலையின் திறமைமிகு பிள்ளைகள்
- ★ பாடசாலை வெளியீடுகள்
- ★ பாடசாலை படைப்புகள்

இவை அனைத்தையும் ஒன்றுதிர
வைக்கக்கூடியதாக இருந்தால், அது
அத்தகைய ஓர் இடம்தான் பாடசா
கருதப்படுகின்றது.

## உங்கள் ப

உங்கள் பாடசாலையில் 'பாடசா
பாடசாலை மத்தியநிலையம்' ஒன்
விடயமாகவே இருக்கும். அத்துடன்
பணியா கும். வேலைப்பளு நிறைந்
அர்ப்பணிப்புடனும் மன ம ச்சியு



எவ்வாறு காட்சிப்படுத்தியுள்ள
அறிந்துகொள்ளுங்கள்.

- ★ பாடசாலையின் பெருமைகளை
சார்ந்த விடயங்களை ஆவணப்
- ★ பாடசாலை மத்தியநிலையத்தை
செயற்றிட்டம் ஒன்றை அமைய
- ★ அதிபரின் அனுமதியைப் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளைப் பாதுகாக்கும் த்தியநிலையம்



டி ஓரிடத்தில் பாதுகாத்து எவ்வளவு பெரிய விடயம்? லை மத்தியநிலையம் ஆகக்

## ங்களிப்பு

லை மரபுரிமைகளைப் பாதுகாக்கும் ற அமைப்பதென்பது ஒரு புதிய , அது ஒரு சவால் மிக்க ததும்கூட. ஆனாலும், டனும் இந்த பணியில்



ட்ட அதனை நிறைவேற்றுவது ம் இலகுவானதே. எனவே, கள் டசாலையில் பாடசாலை ப்நிலையமொன்றை அமைக்க ள் பின்பற்றவேண்டிய வழிமுறை லவற்றை கீழே தருகின்றோம்.

ண்பர்களுடன் இது குறித்து லந்துரையாடுங்கள்.

பாடசாலை ஆசிரியர்களுடன் லந்துரையாடுங்கள்.

பாடசாலைக்குப் பெருமை சேர்க்கும் விடயங்களை பாடசாலையில் னர் என்பதை நன்கு

ஒன்றுதிரட்டும் நோக்கில் அது படுத்துங்கள்.

க் கட்டி எழுப்புவதற்கான மாணவர் குங்கள்.

ங்கள்.

★ பாடசாலை மத்தியநிலையத்தை ஆரம்பிப்பதற்கென ஓரிடத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## திட்டமிடல்

★ பாடசாலை மத்தியநிலையமொன்றை ஆரம்பிப்பதற்காக செயற்குழு ஒன்றை அமையுங்கள்.

★ திரட்டப்பட வேண்டிய விடயங்கள் எவை?, அவற்றை எவ்வாறு சேகரிப்பது?, ஒவ்வொரு பணிக்கும் யார் யாரை நியமிப்பது? போன்ற விடயங்கள் குறித்து திட்டமொன்றை தயாரித்துக்கொள்ளுங்கள்.

★ தகவல் திரட்டுவதற்கு கால அவகாசமொன்றை வரையறுத்துக்கொள்ளுங்கள்.

★ சேகரித்த விடயங்களை உள்ளடக்கி காட்சிப்படுத்துங்கள்.

## எத்தகைய விடயங்கள் சேர்க்கப்பட வேண்டும்?

பாடசாலை மரபுரிமைகளைப் பாதுகாக்கும் பாடசாலை மத்தியநிலையத்திற்கென எத்தகைய தகவல்கள் திரட்டப்பட வேண்டும் என்பது குறித்து சில உதாரணங்கள் வருமாறு;

★ பாடசாலை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரையான அதிபர்களின் தகவல்கள். (ஒவ்வொரு அதிபரினதும் புகைப்படமும் தனிப்பட்ட விபரங்களும்)

★ பாடசாலையில் சேவையாற்றிய ஆசிரியர்களின் விபரங்கள்.

★ பாடசாலையின் பழைய மாணவர்களின் பெயர்ப் பட்டியல், அவர்கள் ஒவ்வொருவர் பற்றிய தகவல்கள்.


★ பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் சென்ற அனைத்து பழைய மாணவர்களினதும் தகவல்கள். அவர்கள் இன்று எந்த நிலையில் இருக்கின்றனர் என்பது குறித்த தகவல்கள்.

★ தற்போதளவில் பாடசாலையில் கல்வி கற்கும் திறமைமிக்க மாணவர்களின் தகவல்கள். (இவை போன்ற மேலும் பல தகவல்களையும் சேகரிக்கலாம்)

## மாணவர் செயற்றிட்டம்

பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்பு மாணவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய குழுச் செயற்பாடுகளில் ஒன்றாகவும் பாடசாலை மரபுரிமைகளைப் பாதுகாக்கும் பாடசாலை மத்தியநிலையத்தை அமைக்க முடியும். அதன்மூலம் மிகவும் பெறுமதிவாய்ந்த அனுபவங் களை பெறும் வாய்ப்பு மாணவர் களுக்கு கிடைக்கும். திட்டமிடல், தேடல்கள், ஆய்வுகள், கணிப்பீடு கள், பாதுகாத்துப் பராமரித்தல், ஆவணப்படுத்தல், காட்சிப்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு செயற்பாடு களில் மாணவர்கள் ஈடுபடுவதற் கான சந்தர்ப்பங்கள் இதன்மூலம் கிடைப்பதோடு, பல அனுபவங் களையும் பெறலாம்.

பாடசாலை மத்தியநிலையத்தை ஒரு மாதத்திலோ அல்லது ஒரு தவணையிலோ ஆரம்பித்து அமைத்துவிட முடியாது. நீங்கள் அதற்கான ஆரம்பப் பணிகளை முன்னெடுத்தால், அடுத்தடுத்து வரும் மாணவர்கள் அதனை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வார்கள்.



-இரஞ்சித் ஜெயகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் வாழும் ஹைனாக்கள்

வேட்டையாடும் முயற்சியில் இறங்கும்பொழுது தனது கூட்டத்தில் ஏனைய ஹைனாக்களுக்கு சமிக்ஞை கொடுத்து ஒன்றோடொன்றாக இணைந்து பெரும் கூட்டமாக சேர்ந்துகொள்ளும்.

## ஸ்பொடட் ஹைனா

**Spotted Hyena**

*Crocuta crocuta*

'ஸ்பொடட் ஹைனா' உடலில் புள்ளிகளைக் கொண்டிருக்கும். சாம்பல் மற்றும் மண்நிறத்தை ஒத்த தோலினையும் கொண்டுள்ளது. இதன் பிடரி கழுத்து மற்றும் முதுகுப்புறத்தில் அடர்ந்த மயிர்கள் காணப்படும். தோலின் மேற்பகுதியில் கடும் நிறத்தைக் கொண்ட புள்ளிகள் காணப்படும். பெண் விலங்கு ஆண் விலங்கைவிட, ஓரளவு பெரியது. இந்த வகை ஹைனாக்களுக்கு சிங்கமே பெரும் நெருக்கடிகளைக் கொடுக்கும்.

| | |
|---|---|
| பிரதேசம் | 20 சஹாரா ஆபிரிக்க வலய புல்நிலம், சவான்னா மற்றும் அரைப் பாலைவனம். |
| உணவு | ஒட்டகச்சிவிங்கி, காட்டெருமை போன்ற விலங்குகள் |
| நீளம் | 4 அடி 6 அங்குலம். [வால் இல்லாமல்] |
| நிறை | சுமார் 70 கிலோ கிராம் |

புராதன எகிப்தியர் இந்த 'ஸ்ட்ரிப்ட் ஹைனாக்களை' வளர்ப்புப் பிராணியாக தமது வீடுகளில் வளர்த்து வந்தனர்.





ஆபிரிக்க சிங்கத்தை அடுத்து ஆபிரிக்க வலயத்தில் வாழும் மிகப்பெரிய மாமிச உண்ணியாக ஸ்பொட்டட் ஹைனாக்கள் கருதப்படுகின்றன. இந்த ஹைனா வெளிப்படுத்தும் புதுவிதமான சத்தமும் முகத்தில் காணப்படும் கோடுகளின் காரண மாகவும் 'சிரிக்கும் ஹைனா' என்றும் புகழ்பெற்றுள்ளது.

ஆண் ஹைனாவைவிட, பெண் விலங்கின் உடலில் 'டெஸ்டொஸ்டெரொன் ஹோர்மோன்கள்' அதிகம் உள்ளன. அதனால், ஆண் ஹைனாவைவிட, பெண் ஹைனா 30% பெரியது.

தனது எதிரிகளின் சின்னஞ்சிறிய குட்டிகளை வேட்டையாடுவதில் ஹைனாக்கள் பெரும் விருப்பமுடையவை. அந்த வகையில், சிங்கக் குட்டிகளை வேட்டையாடுவதில் மிகவும் திறமை கொண்டவை.

## ஆர்ட்வூல்ஃப்

**Aardwolf**

*Proteles cristata*

மஞ்சள் நிறத்தை ஒத்த வெள்ளை நிற உடலைக் கொண்டது. உடலின் இரு பக்கமும் கிடையான கருமை நிறக் கோடுகளைக் காணலாம். கழுத்தைச் சுற்றியும் உடலின் பின்புறம் வரையிலும் நீண்ட ரோமத்துடன் கூடிய தோல் காணப்படுகின்றது. பார்ப்போரை அச்சுறுத்தும் தோற்றத்தையும் கொண்டு விளங்குகின்றது. பின்னங்கால் களை விட, முன்னங்கால்கள் ஓரளவு நீளமானது.

| | |
|---|---|
| பிரதேசம் | கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்க வலயம் |
| உணவு | கறையான், சிறிய வகைப் பூச்சிகள் |
| நீளம் | 2 அடி 6 அங்குலம் [வால் இல்லாமல்] |
| நிறை | ஏறக்குறைய 20 கிலோகிராம் |

## ஸ்ட்ரிப்ட் ஹைனா

**Striped Hyena**

*Hyaena hyaena*

ஸ்ட்ரிப்ட் என்பது கோடு அல்லது நாடாவைக் குறிக்கும். உடலில் கால்களில் மற்றும் கழுத்தில் நீளவாக்கில் சாம்பல் நிறம் முதல் இள மண்நிறம் வரையிலான கோடுகள் காணப்படும். அதனால் இதற்கு இப்பெயர் வரக் காரணமாக அமைந்தது. இம்மிருகத்தின் தாடை மிகவும் பலம் பொருந்தியது.

| | |
|---|---|
| பிரதேசம் | ஆபிரிக்கா மற்றும் தென், மேல் ஆசிய மலைத்தொடர், புல்வெளிகள் |
| உணவு | ஊர்வன, பூச்சிகள், பழங்கள் இறந்த விலங்குகள். |
| நீளம் | 3 அடி 3 அங்குலம் [வால் இல்லாமல்] |
| நிறை | 40 கிலோ கிராம் |

ஆபிரிக்கா மற்றும் ஆசிய வலயங்களில் காணக்கூடிய 'ஹைனா' எனப்படும் விலங்கினமானது காடுகளில் குப்பைகளைச் சுத்தப்படுத்தும் ஓர் உயிரினமாக கருதப்படுகின்றது. அந்தவகையில், சிங்கம் மற்றும் புலிகளால் வேட்டையாடும் மிருகங்களின் அழுகிய கழிவுகள் இதன் உணவாகும். அக்கழிவான உணவின் சகல பகுதிகளையும் இந்த ஹைனாவினால் உண்ண முடியும்.

(-அ)



ஹைனா தனது உணவில் 95% மானவற்றை தான் இரையாக்கும் விலங்குகளில் இருந்தே பெறுகின்றது.

ஹைனாக்கள் சிம்பன்சியை விட அதிக புத்திக் கூர்மையுள்ள விலங்கு எனவும் கண்டுபிடிக்கப்பட் டுள்ளது.



## ப்ரவுன் ஹைனா

**Brown Hyena** *Parahyaena brunnea*

உடல் மண்நிறமாக அமைந்திருப்பதால் இப்பெயர் வந்தது. கழுத்துக்கருகில் வெள்ளை நிறத் தோல் பகுதி காணப்படுகின்றது. இதயத்திலிருந்து பாதம் வரை இளம் மண்நிற நாடாவைப் போல் காணப்படும். புள்ளிகளுடன் கூடிய ஹைனாவைவிட, குறைந்தளவு வளர்ச்சி வேகம் கொண்டவை 15 பேரைக் கொண்ட ஒரு குழுவாக வசிக்கும்.

| | |
|---|---|
| பிரதேசம் | தென் ஆபிரிக்க புல்வெளிகள், அரைப்பாலைவனம், சவன்னா பிரதேசம் |
| உணவு | பறவைகள், சிறிய வகை முலையூட்டிகள் |
| நீளம் | ஏறக்குறைய 4 அடி 6 அங்குலம் [வால் இல்லாமல்] |
| நிறை | 47 கிலோ கிராம் |


ஆண் ஹைனாக்கள் பிறந்த இரண்டு வருடத்திலேயே குடும்பத்தைவிட்டு விலகி தனியாகவே வேட்டையாடி வாழ முயற்சிக்கும். ஆனால் பெண் ஹைனாக்கள் அப்படியல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்டார்ழிக்காவில் கற்பாறையாக மாறிய காடுகள்



நிலப்பரப்பின் அடிப்படையில் உலகில் 5 ஆவது மிகப்பெரிய கண்டம் அண்டார்டிக்காவாகும். இது 14 மில்லியன் சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. அதன்படி, அண்டார்டிக்காவானது, ஐரோப்பா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய இரு கண்டங்களையும் விட அளவில் பெரியது.



## அண்டார்டிக் சொர்க்கம்

600 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இன்று காணப்படும் தோற்றத்தினைப் போன்று உலகம் அமைந்திருக்கவில்லை. இன்று பிரிந்து காணப்படும் 7 கண்டங்களுக்குப் பதிலாக அக்காலத்தில் மாபெரும் ஒரே ஒரு தனிக் கண்டமாகவே உலகம் காணப்பட்டது. அது 'பெஞ்சியா' (Pangaea) என அழைக் கப்பட்டது. நூறு மில்லியன் வருடங்கள் கழிந்த பின்னர் பெஞ்சியாவின் தென் பிரதேசமான 'கொண்டிவானா' (Gondwana) பகுதி பெஞ்சியாவிலி ருந்து பிரிந்து வேறானது. அது படிப்படியாக தென்னரைக் கோளத்தை நோக்கி நகர்ந்து ஈற்றில் உலகில் இன்று அண்டார்டிக்கா இருக்கும் இடத்தை அடைந்தது.

## மனம் விரும்பும் சூழல்

பெஞ்சியாவில் நிலவிய மிதவெப்பக் காலநிலை யானது, பல்வேறு மரஞ்செடி கொடிகள் செழிப்பாக வளர உதவின. அந்தவகையில், தன் வசமிருந்த நீர்நிலை களுடனும் காடுகளுடனும் பெஞ்சியாவில் இருந்து கொன்டிவானா பகுதி பிரிந்து வேறாகி நகர்ந்தது. இப்பகுதி நகர்ந்து சென்ற தென் அரைக் கோளமானது, வருடத்தில் 5 மாதங்கள் முழுமையாக சூரிய ஒளியே படாத நீண்ட கடுங்குளிர் நிறைந்த இரவுடன் காணப்பட்டது.

பெர்மியன் யுகம் (Permian Period) என அழைக்கப்பட்ட இக்கால கட்டத்தில் கொண்டி வானா பிரதேசம் முழுவதும் 'க்ளோசப்டெரிஸ்' (Glossopteris) எனும் வகையைச் சேர்ந்த மரங் களே அதிகளவில் காணப்பட்டன. அவை குளிர் காலநிலைகளைத் தாக்குப்பிடிக்கும் மிகப் பெரிய மரங்களாகும்.

## இயற்கை அனர்த்தம்

ஆதிகால அண்டார்டிக்காவை போர்வை போல் மூடிக்கொண்டிருந்த மாபெரும் 'பர்மியன்' காடுகளை புதைமங்களாக்கிய 'பர்மியன் ட்ரையெசிக்' எனப்படும் மாபெரும் இயற்கை அழிவினால் புவியில் வாழ்ந்த உயிரினங்களில் 95% வீதமானவை அழிந்து போயின. எனினும், இந்த பர்மியன் ட்ரையெசிக் பேரழிவிற்கான உறுதியான காரணங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. எரிமலைகளின் செயற்பாடுகள், கடல் நீர் அமிலம் [அஸிட்] அடைந்தமை இவற்றிற்கு காரணிகளாக அமைந்திருக்கலாம்.

## கற்பாறைகளான மரங்கள்


இச்செயற்பாடுகளின் விளைவாக, கொன்டியானாவின் பாரிய காடுகள் மிக விரைவாக புதைமங்களாகப் புதைந்து போயின. மரங்களில் இருந்த ஃபங்கஸ் வகைகள் அனைத்தும் கனிமங்களாக மாறின. அவை கனிப்பொருள் பாறைப் படிமங்களாகின.

## மாற்றம் குறித்த நினைவூட்டல்

புதைமங்கள் ஆக்கப்பட்ட இம்மரங்கள் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் பின் கற்பாறைகளாகின. கடுங்குளிரான கண்டங்களில் கற்பாறைப் படிவுகளாகப் படிந்த மரங்களை இன்றும் அங்கு காணலாம்.

– இரஞ்சித் ஜெயகர்





noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் 10




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி மேதாவி

கதை, ஓவியம் எச்டி









## சப்புக் கோழி (Purple Coot)

இந்தப் பறவை உயரமான காலுள்ள கோழி போன்ற தோற்றத்தைக் கொண்டது. சொண்டும் நெற்றிப் பகுதியும் சிவப்பு நிறமானவை. ஊதா மற்றும் பச்சை சிறகுகளால் இதன் உடல் மூடப்பட்டிருக்கும்.

நீர்நிலைகளை அண்டி வாழும் இது தமிழ்நாட்டிலும் உள்ளது. சம்பு, இலுக்கு மற்றும் பன்னப்புல் தரை இவைக்கு ஏற்ற வாழ்விடமாகும். இவை 5 முதல் 12 வரையான பறவைகளைக் கொண்ட கூட்டமாகக் காணப்படும். இவை விளைந்த நெற்பயிர்களையும் சேதம் செய்வன. இதனை 'குளக்கோழி' எனவும் கூறுவர்.

அடுத்த வாரம்
**மாம்பழக் குருவி**

## உலகிற்கு எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர்கள்



உலகில் அக்கால கட்டத்தில் வாழ்ந்த பாபிலோனியர்களும் எகிப்தியர்களுமே எள்ளிலிருந்து எண்ணெய்யை பிரித்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்தினர். இதுவே தற்போது உலகமெங்கும் பாவனையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு, இந்த எண்ணெய்யை தொடர்ந்து உணவில் சேர்த்துக் கொண்டால் சிறந்த உடற் பலத்தையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

## வியர்வையை வெளிவிடும் மரம்

மனிதர்களைப் போன்று மரங்களும் வியர்வையை வெளிவிடுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அந்தவகையில் வியர்வையை வெளிவிடும் மரமாக ஓக் மரங்கள் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.



## மாணவர்கள் அறிந்திடா ஒத்த கருத்துச் சொற்கள்



1. சென்னி - தலை
2. பவனம் - காற்று
3. சாளரம் - யன்னல்
4. உகிர் - நகம்
5. அஞ்சுகம் - கிளி
6. தொந்தி - வயிறு
7. கொண்மூன் - மேகம்
8. வடம் - கயிறு
9. அகநகை - இகழ்ச்சிச்சிரிப்பு
10. தேசிகர் - ஆசிரியர்

- [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி சென்ற விலங்குகள்



விண்வெளியில் உயிர்வாழ்வது சாத்தியப் படுமா? என்பதை கண்டறிவதற்காகவே முதன்முதலில் விண்வெளிக்கு விலங்குகள் அனுப்பப்பட்டன. பின்னர், பல்வேறு உயிரியல்





செயல்முறைகள் மற்றும் பல ஆய்வுகளுக்காக விண்வெளிப் பயணங்களின்போது விலங்குகள் பயன்படுத்தப்பட்டன. இன்று வரை ஏழு தேசிய விண்வெளித் திட்டங்கள்மூலம் விண்வெளிக்கு விலங்குகள் அனுப்பப்பட்டுள்ளன. சோவியட் யூனியன், அமெரிக்கா, பிரான்ஸ், ஆர்ஜன்டீனா, சீனா, ஜப்பான், ஈரான் போன்ற நாடுகளே இந்த திட்டங்களை முன்னெடுத்துள்ளன. 1783 ஆம் ஆண்டுதான் விண்வெளி ஆய்வுக்காக முதன்முதலில் விலங்குகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில், ஒரு செம்மறியாடு, வாத்து, சேவல் ஆகியவையே விண்வெளி ஆய்வில் முதன்முதலில் ஈடுபடுத்தப்பட்ட விலங்குகளாகும். இதன்பின்னர் எலிகள், வெள்ளெலிகள், கினி பன்றிகள், பூனைகள், ஆமைகள், பூச்சியினங்கள், நாய்கள், தவளைகள், தங்கமீன் மற்றும் குரங்குகள் போன்ற பல்வேறு விலங்கினங்கள் காலத்திற்குக் காலம் விண்வெளிக்கு அனுப்பப்பட்டுள்ளன.

# உலகை உலுக்கிய உலகப் போர்கள்



உலகப் போர் என்பது, உலகின் பல நாடுகளின் பங்களிப்புடனோ அல்லது உலகிலுள்ள அநேகமான வல்லரசு நாடுகளின் அல்லது பிரசித்தி பெற்ற நாடுகளின் பங்களிப்புடனோ இடம்பெறுகின்ற மிகப் பெரிய போர் ஆகும். உலக நாடுகளுக்கிடையில் இடம்பெறுகின்ற பல்வேறு மோதல் நிலைகள் உலகப் போர்களுக்கு வித்திடுவதாக அமைகின்றன. இன்று வரை உலகில் இரண்டு உலகப் போர்கள் இடம்பெற்றுள்ளன. அவை 'முதலாம் உலகப் போர்' (1914 இல் இருந்து 1918 வரை), 'இரண்டாம் உலகப் போர்' (1939 இல் இருந்து 1945 வரை) என அறியப்படுகின்றன.

# உண்ணும்போது...

நீங்கள் வலது கைப்பழக்கம் உடையவராக இருந்தால், வாயில் போடும் உணவை முதலில் வாயின் வலப்பக்கமாகவே மென்று உண்ண ஆரம்பிப்பீர்கள். அவ்வாறே, நீங்கள் இடது கைப்பழக்கம் உடையவராக இருந்தால், உணவை முதலில் வாயின் இடது பக்கமாகத்தான் மென்று உண்ண ஆரம்பிப்பீர்கள்.



# எனக்குத் தெரியாது...!



அவுஸ்திரேலியாவில் மட்டும் காணக்கூடிய ஒரு விலங்கினம்தான் 'கங்காரு' ஆகும். இது அந்நாட்டின் தேசிய விலங்காகவும் கருதப்படுகின்றது. 'Kangaroo' என்ற பெயர் எப்படி பாவனைக்கு வந்தது என்பது குறித்து உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கதை உள்ளது.

அதாவது, பிரித்தானிய நாடுகாண் பயணியான ஜேம்ஸ் குக், அவுஸ்திரேலியாவில் தரையிறங்கியபோது இந்த விலங்கினத்தைக் கண்டுள்ளார். அப்போது அங்கிருந்த அவுஸ்திரேலிய பழங்குடியினத்தவரிடம் அதனைக் காட்டி "அந்த விலங்கினத்தின் பெயர் என்ன?" என வினவியுள்ளார். ஜேம்ஸ் குக் என்ன கேட்கின்றார் என்பதைப் புரியாத அந்த பழங்குடியினத்தவர், பழங்குடி மொழியில் 'Kan-Ga-Roo' எனக் கூறியுள்ளார். அதன் அர்த்தம் "எனக்குத் தெரியாது" என்பதாகும். பின்னர் அந்த வார்த்தையே குறித்த விலங்கினத்தின் பெயராக நிலைத்துவிட்டது.



இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2018, ஏப்ரல் 11, புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 11, 2018.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org